சித்தாந்தப் பிரகாசிகை

SIDDHANTHA PRAKASIKAI

1968

CSS

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திராவிட பாஷ்யாசாரியர்

திருவாவடுதுறை ஆதீனத்து முனிபுங்கவர்

ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள்

213–ஆவது ஆண்டு

ஆராதனை விழா மலர்

பஹூதான்ய – சித்திரை – ஆயில்யம்

4.5.1998

உரிமை பதிவு:
விலை ரூபா: 10.00

முதற்பதிப்பு 1947
இரண்டாம் பதிப்பு 1954
மூன்றும் பதிப்பு 1963
நான்காம் பதிப்பு 1998 – படிகள் 2000

பதிப்பகம்
ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடுழி தழைக மாதோ.

– ஸ்ரீமாதவச் சிவஞான யோகிகள்.

வெளியீடு எண்:448

உ

சிவமயம்

நிருச்சிற்றம்பலம்

திராவிட பாஷ்யாசாரியர்

திருவாவடுதுறை ஆதீனத்து

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்

மொழிபெயர்த்தருளிய

சித்தாந்தப் பிரகாசிகை

இது

ஆதீனம் குருமுதல்வர்

ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்

அருள்பெருந்துணையுடன்

வெளியிடப்பெறுவது

திருவாவடுதுறை ஆதீனம்

1998

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தோத்திரம்

கருணைபொழி திருமுகத்தில் திருநீற்று நுதலும்
கண்டாரை வசப்படுத்தக் கனிந்தவா யழகும்
பெருமைதரு துறவோடு பொறையுளத்திற் பொறுத்தே
பிஞ்ஞகனூர் மலர்த்தாள்கள் பிரியாத மனமும்
மருவினர்கள் அகலாத ஞானமே வடிவாம்
வளர்துறைசைச் சிவஞான மாமுனிவன்
மலர்த்தாள்
ஒருபொழுதும் நீங்காமல் எமதுளத்தில் சிரத்தில்
ஓதிடுநாவினிலென்றும் உன்னிவைத்தே
யுரைப்பாம்

– மதுரகவி சுப்பிரமணிய முனிவர்

ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்

விஷய சூசிகை

பிரகரணம்

	பக்கம்
1. தேகப்பிரகரணம்	2
2. தத்துவப் பிரகரணம்	3
க. போக்கிய காண்டம்	3
உ. போசயித்திரு காண்டம்	6
ஈ. பிரேர காண்டம்	7
3. அத்துவாப் பிரகரணம்	13
4. ஆத்மப் பிரகரணம்	14
5. பந்தப் பிரகரணம்	15
6. சாஸ்திரப் பிரகரணம்	17
7. தீக்ஷாப் பிரகரணம்	33

முதற்பதிப்பின் முன்னுரை

உ

சிவமயம்

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ..

சித்தாந்த பிரகாசிகை என்னும் நூல் வடமொழியிலே சர்வாத்ம சம்பு சிவாசாரியராலே அருளிச்செய்யப்பட்டது. வடமொழிச் சித்தாந்த பிரகாசிகையின் இறுதியில் வரும்,

"इति सर्वमतेष्विष्टा सा सिद्धान्तप्रकाशिका। सर्वात्म-शम्भुनाख्याता कल्पिता सैव सन्मता"

என்னும் சுலோகத்தானும், தமிழ் மொழிபெயர்ப்பில் நூல்வழி முதலாயின கூறுமிடத்து,

'சைவா கமத்தின் மெய்யுணர் காட்சி
அருட்சர் வான்ம சம்புவா சிரியன்
தருசித் தாந்தப் பிரகா சிகையினை
அம்முறை மொழிபெயர்த் தறைகுவன்
செம்மனத் தமிழோர் தெளிதரற் பொருட்டே'

எனவரும் செய்யுளானும் இது அறியப்படும்.

இந்நூலாசிரியர் பெயரை நோக்குமிடத்துச் சோமசம்பு ஞானசம்பு முதலிய ஆசிரியர்கள் போலச் சம்பு பரம்பரையில் வந்தவராய் இருத்தல் கூடும் என்பது ஊகிக்கப்படுகிறது. இவரைக் குறித்த வேறு வரலாறு தெரிந்திலது. சிவஞான பாடியத்தில் ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள் இந்நூலாசிரியரைப் பிரமாண ஆசிரியராக எடுத்தாண்டிருப்பது இவர் பெருமையை விளக்கும்.

இந்நூலிலே சைவ சித்தாந்தம் கற்கப் புகுவார் முதலிலே அறியவேண்டிய தத்துவங்கள், அவற்றின் தோற்றம், அத்துவாக்களின் விவரம், தீக்ஷையின் பேதம், சாத்திரங்களின் வகைகள், அவைகளிற் சொல்லப்படும் விஷயங்கள், சிவாகமங்களின் விசேஷம் முதலிய பல விஷயங்கள் விளக்கப் படுகின்றன. வடமொழியிலே தத்துவங்களை விளக்கும் சிறு நூல்களாக இராமநாத தீபிகை, மத்தியார்ஜுநேசதீபிகை முதலிய பல நூல்களிருப்பினும், இந்நூலின் சிறப்பினை உத்தேசித்து, இதுவே சைவசித்தாந்த சாஸ்திரப் பிரவேசம் செய்யும் இளைஞர்கட்குப் பாடம் சொல்லப்பட்டு வந்தது.

வடமொழிக் கல்வி அருகிவரும் கால நிலையைத் திருவுளம் கொண்டு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்துத் திராவிட மாபாஷ்யகாரராகிய ஸ்ரீமத் மாதவச் சிவஞான சுவாமிகள் வடமொழிச் சித்தாந்தப் பிரகாசிகையைத் தமிழிலே மொழிபெயர்த்தருளினார்கள். நமது திருவாவடுதுறையாதீன பரம்பரையில் இந்நூலே சைவசாஸ்திர பாடம் கற்கப் புகுவோர்க்கு முதலிற் கற்பிக்கப்படுவது வழக்கம்.

இத்தமிழ்நூல் சென்னை ரிப்பன் பிரஸ்ஸிலும், யாழ்ப்பாணத்திலும் நெடுநாள் முன்னர் அச்சிடப்பட்டன. 1919ம் ஆவது விக்கிரமசிங்கபுரத்துச் சிவஞான பக்த ஜன சபையார் இதனை அச்சிடுமாறு என்னைப் பணித்தனர். அவர்கள் இட்ட பணியை சிரமேற்கொண்டு ஒருவாறு நூலைப் பரிசோதித்து, விஷயங்களுக் கேற்பப் பிரகரணப்பாகுபாடு செய்து நிறைவேற்றினேன். பின்பு திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக

இந்த நிலையில் இந்நூலைச் செம்மையான முறையில் அச்சிட்டு உபகரிக்க வேண்டுமென்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து 20–ஆவது மகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீ–ல–ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் திருவுளங் கொண்டு எனக்குக் கட்டளையிட்டருளினார்கள். அவர்கள் கருணை விசேடத்தால் இப்பதிப்பு வெளிவருகின்றது.

இந்நூலின் அடிக்குறிப்பில் எடுத்தாண்ட நூல்களின் விவரம்: இரத்தினத் திரயம், ஸ்ரீகாமிகாகமம், சகஸ்ராகமம், சிந்தியாகமம், சிவஞானசித்தியார், சிவஞான பாடியம், சிவப்பிரகாசம், சுருதி சூக்திமாலை, சோமசம்பு பத்ததி, தத்துவப் பிரகாசம், திருவாசகம் என்பன.

இதனை ஆராய்ச்சி செய்தற்குக் கிடைத்த பிரதிகள் பல. அவற்றுள் முக்கியமானவைகளை மட்டும் குறிப்பிடுகின்றேன்:

வடமொழி மூலப் பிரதிகள்: 1. திருவாவடுதுறை ஆதீனத்துக் கையெழுத்துப் பிரதி, 2. யாழ்ப்பாணத்து அச்சுவேலி ஸ்ரீமத் குமாரசாமிக் குருக்களவர்கள் ஏட்டுப் பிரதி. 3.திருவாவடுதுறை ஸ்ரீமத் சாமிநாத சிவாசாரியாரவர்கள் பிரதி.

தமிழ்ப்பிரதிகள்: 1. யாழ்ப்பாணத்து அச்சுவேலி ஸ்ரீமத் குமாரசாமிக் குருக்களவர்கள் ஏட்டுப்பிரதி. 2. சென்னை ரிப்பன் பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்ட அச்சுப்பிரதி. 3. யாழ்ப்பாணத்தில் பதிப்பிக்கப்பட்ட அச்சுப்பிரதி. 4. சிவஞான பக்த ஜன சபையார் வெளியிட்ட அச்சுப்பிரதி. 5. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக பிரசுர அச்சுப்பிரதி.

இந்த வெளியீட்டில் என் அறிவு சென்ற அளவில் பாடத்தைச் சுத்தம் செய்து, இன்றியமையாத இடங்களில் குறிப்புக்கள் எழுதியிருக்கின்றேன். குற்றங் காணப்படின் பொறுத்தருளுமாறு அறிஞருலகத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

ச

திருவாவடுதுறை ஆதீனத்தில் என்றும் அன்பும் அபிமானமும் உள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் பிரமஶ்ரீ. உ.வே.சாமிநாதஐயரவர்களதுகுமாரர்பிரமஶ்ரீஎஸ்.கலியாணசுந்தர ஐயரவர்கள் இதனைப் பதிப்பிக்க உடன்பட்ட பெருந்தன்மைக்கு நன்றி செலுத்துகின்றேன்.

நுணங்குஞ் சமய நூற்றலைமை
நுவலுந் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான
போதக் கதிரு னெறிகாட்டிப்
பணங்கொ ளரவர் துறைசையில்வாழ்
பஞ்சாக் கரதே சிகன்மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த
வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

திருவாவடுதுறை
24–1–1947

வி.சிதம்பர ராமலிங்கம் பிள்ளை
ஆதீன வித்துவான்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தப் பிரகாசிகை

கடவுள் வாழ்த்து

*வணங்கி வாழ்த்தி மதிப்பரும் பொருளை
வணங்கி வாழ்த்தி மதித்துமன் பெரிதே. 1

இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளும்
படைத்துடன் விராய்ப்பசு பாச மாற்றிய
முப்புரப் பகைஞன் முழங்குகழல் நோன்ருள்
மெய்ப்படப் பரசும் வீடுபெறற் பொருட்டே. 2

நூல் வழி முதலாயின

சைவா கமத்தின் மெய்யுணர் காட்சி
அருட்சர் வான்ம சம்புவா சிரியன்
தருசித் தாந்தப் பிரகா சிகையினை
அம்முறை மொழிபெயர்த் தறைகுவன்
செம்மனத் தமிழோர் தெளிதரற் பொருட்டே. 3

---

*இது, "' "अवर्णविग्रहं देवं वर्णविग्रहवर्जितं।
वर्णविग्रहवक्तारं नौम्यहं स्तौमिसंश्रये"

என முதனூலில் வருவதன் மொழிபெயர்ப்பு. அச்சுலோகம் சகஸ்ராகமத்தில் ராத்திரியந்தக பூஜாவிதி படலத்திற் காணப்படுகின்றது. அதனையே ஸ்ரீசர்வாத்ம சம்பு சிவாசாரியர் தமது நூலின் முதலில் கடவுள் வாழ்த்தாக அமைத்துக் கொண்டார்.

சிறப்புப் பாயிரம்

வடநூற் கடலும் தென்றமிழ்க் கடலும்
முழுதுணர்ந் தருளிய முனிவரன் துறைசை
வாழ்சிவ ஞான மாதவன் முன்னூற்
சித்தாந் தப்பிர காசிகை சிறந்திட
மொழிபெயர்த் தருளினன் தென்மொழி யாக
மருளகன் றெம்மனோர் மதிபெறற் பொருட்டே.

நூல்

1. தேகப்பிரகரணம்

ஈண்டுச் *சாதி குலம் பிறப்பு முதலியவற்றுன் அபிமானஞ் செய்தற்கு இடமாகிய இந்தத் தூலதேகம் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் இவ்வைந்தும் கூடிப் பரிணமித்தது. இந்தத் தூலதேகத்தில் முன்செய்த புண்ணிய பாவங்களுக்கு ஈடாகிய வேதியர்முதலாகிய சாதியும் வடிவும் அழகும் இந்திரிய வலிமையும் பெற்று வரையறைப்படும் ஆயுளும் வரையறைப்படும் போகமும் உடையவனுய் உடம்பிற்கு வேருய் உடம்பினுற் செய்யப்படும் புண்ணிய பாவங்களுக்கு இடமாய் நித்தனுய் அருவாய் வியாபகனுய் ஞானக்கிரியா சொரூபியாய் ஆணவம் கான்மியம் மாயேயம் வைந்தவம் திரோதசத்தி என்னும் ஐவகைப் பாசத்தாற் கட்டுண்டு போக்கு வரவு உடையவனுய்ப் புருடன் என நிற்பவன் ஆன்மா.

---

*முதனூலில் " " इह तावज्जातिकुलाद्यभिमानास्पदभिदं स्थूलदेहं... எனச் சாதி குலம் முதலியவற்றுல் என்று கூறியிருப்ப இங்கே 'சாதி குலம் பிறப்பு முதலியவற்றுல்' எனக் கூறியது திருவாசகத்து வரும் 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டு' என்னும் திருவாக்கைப் பின்பற்றியதாகும்.

இந்த ஆன்மா போகம் நுகர்தற்குக் கருவியாகிய சூக்கும தேகம் பிருதிவி முதல் கலை ஈருகிய முப்பது தத்துவங்களான் ஆக்கப்பட்டு ஆன்மாக்கள் தோறும் வெவ்வேருய் ஆயுள் முடிவின் முன்னுடம்பு விட்டு மற்ரேருடம்பு எடுத்தற்கு ஏதுவாயிருக்கும்.

2. தத்துவப்பிரகரணம்

க. போக்கிய காண்டம்

இவ்விருவகை யுடம்பிற்கும் ஏதுவாகிய தத்தவங்களின் பெயரும் தொழிலும் தோன்று முறைமையும் எவ்வாறென்னில்:

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களுக்கும் பூதம் என்று பெயர். இவற்றிற்குக் காரணமான கந்தம் இரதம் உருவம் பரிசம் சத்தம் என்னும் ஐந்து தத்துவங்களுக்கும் தன்மாத்திரை என்று பெயர். இப்பத்தும் காரியம் எனப்படும்.

வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் ஐந்து தத்துவங்களுக்கும் கன்மேந்திரியம் என்று பெயர். இவற்றின் தொழில் முறையே வசனமும் கமனமும் தானமும் விசர்க்கமும் ஆனந்தமும் ஆம். சோத்திரம் தொக்குசட்சுசிங்குவை ஆக்கிராணம் என்னும் ஐந்து தத்துவங்களுக்கும் ஞானேந்திரியம் என்று பெயர். இவற்றின் தொழில் முறையே *சத்தமும் பரிசமும் உருவமும் இரதமும் கந்தமும் என்னும் இவற்றை அறிதலாம். இந்த வாக்கு முதலிய கன்மேந்திரியம் ஐந்தும் சோத்திர முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் ஆகப் பத்தும் கரணம் எனப்படும்.

மனமும் அகங்காரமும் புத்தியும் என்னும் மூன்று தத்துவமும், உடம்பின் புறத்துச் சென்று புலன்களை நுகர்விக்கும் சோத்திர முதலிய இந்திரியங்களைப் போல, அகத்து நின்று

---

*தன்மாத்திரை வடிவாகிய சத்தம் முதலியன வேறு; ஞானேந்திரியங்களால் அறியப்படும் சத்தம் முதலியன வேறு; சிவஞானசித்தியார் 2–ஆம் சூத்திரம் 64–ம் திருவிருத்தத்திற்கு ஸ்ரீமாதவ சிவஞான சுவாமிகள் அருளிய உரை அறியத்தக்கது.

தொழிற்படுத்துதலான் *இம்மூன்றிற்கும் அந்தக் கரணம் என்று பெயர். இவற்றுள் மனத்தின் தொழில் ஒரு பொருளைச் சங்கற்பித்தலும் சோத்திரம் முதலிய இந்திரியங்களைப் புறத்தே விடயங்களிற் செலுத்தலுமாம். அகங்காரத்தின் தொழில் அபிமானம் செய்தலும் பிராணன் முதலிய வாயுக்களை இயக்குதலுமாம். புத்தியின் தொழில் ஒரு பொருளைத் துணிதலாம். துணிதலாவது இஃது இப்பியன்று, வெள்ளியே என்று நிச்சயித்தலாம். ஆக இங்ஙனம் கூறப்பட்ட தத்துவங்கள் இருபத்து மூன்று.

இவற்றுள் நிச்சயித்தற்குக் காரணமான புத்தி தத்துவத்தினின்றும் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்தாகிய அகங்காரம் தோன்றும். இதனுள் சாத்துவிக அகங்காரத்தினின்றும் மனமும் சோத்திரம் முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும். இராசத அகங்காரத்தினின்றும் வாக்கு முதலிய கன்மேந்திரியம் ஐந்தும் தோன்றும். தாமத அகங்காரத்தினின்றும் கந்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்துந் தோன்றும். கந்தம் முதலிய தன்மாத்திரைகள் ஐந்தினின்றும் முறையே பிருதிவி முதலிய பூதம் ஐந்தும் தோன்றும்.

---

*அந்தக்கரணம் நான்கென்றிருப்ப, இங்கே மனம் அகங்காரம் புத்தி என்னும் மூன்றைமட்டும் அந்தக்கரணமென்றது மனம் ஒன்றுதானே சிந்திக்கும் அவஸ்தையிற் சித்தமாய் நிற்குமாதலின் "பயனில் வேறுபாடின்மையின் மனமே அவத்தை விசேடத்தாற் சித்தமென விருத்திப்பட்டு நின்று அங்ஙனம் தூக்கிச் சிந்திக்கும் என்று உணர்க. இதனானே மனத்தின் விருத்தியாகிய சித்தமொன்று உண்டென்பது பெற்றும். அஃது ஏனைத் தத்துவங்கள் போலப் பரிணமமன்மையின், மனத்தின் வேறுக வைக்கற்பாற்று அன்று என்னும் கருத்தால் 'சிந்தை நினை வையம் வந்து தரு மனம் ஒழிய வகுப்பொணுதே' (சிவப்பிரகாசம், பொது, 31) என்ருர் புடைநூலாசிரியரும்;.. இதனுலே அந்தக்கரணம் மூன்றெனக் கொண்டு குணதத்துவத்தை மூலப்

பூதங்களின் தொழில் முறையே தரித்தலும் பதஞ் செய்தலும் சுடுதலும் அவயவங்களைத் திரட்டுதலும் ஏனை நான்கு பூதத்திற்கும் இடங்கொடுத்தலும் ஆம். இவற்றுள் பிருதிவிக்குச் சத்தமும் பரிசமும் உருவமும் இரசமும் என்னும் நான்கும் பொதுக்குணம்; கந்தம் ஒன்றும் சிறப்புக்குணம். அப்புவுக்குச் சத்தமும் பரிசமும் உருவமும் மூன்றும் பொதுக்குணம்; இரசம் ஒன்றும் சிறப்புக் குணம். தேயுவுக்குச் சத்தமும் பரிசமும் பொதுக்குணம்; உருவம் ஒன்றும் சிறப்புக் குணம். வாயுவுக்குச் சத்தம் ஒன்றும் பொதுக்குணம்; பரிசம் ஒன்றும் சிறப்புக் குணம். ஆகாயத்திற்குச் சத்தகுணம் ஒன்றே. இந்த சத்தம் வன்னரூபம் அன்று; எதிரொலி வடிவாயிருக்கும்.

இப்பிருதிவி முதலிய இருபத்திரண்டு தத்துவங்களுக்கும் மேலாகிய புத்திதத்துவத்திற்குக் காரணம் குணதத்துவம். இது சாத்துவிகம் இராசதம் தாமதம் என மூவகைத்தாய், முறையே சுக துக்க மோகங்களுக்குக் காரணமாக இருக்கும். இக்குணதத்துவத்திற்குக் காரணம் பிரகிருதி தத்துவம்.

பகுதியின் வேறுவைத்தெண்ணி மூலப்பகுதிக்குக் கீழ்த்தத்துவம் இருபத்து நான்கெனத் தொகை கொள்ளுவாரும், குணதத்துவத்தை மூலப்பகுதியுள் அடக்கி உபகரித்தற் சிறப்புப் பற்றிச் சித்தத்தை மனத்தின் வேறு வைத்து எண்ணி அந்தக் கரணம் நான்கெனக் கொண்டு மூலப்பகுதிக்குக் கீழ்த் தத்துவம் இருபத்துநான்கெனத் தொகை கொள்வாரும், சித்தமும் மனமும் ஒன்றுக வைத்து மூலப்பகுதியையும் குணதத்துவத்தையும் ஒன்றுக வைத்தெண்ணி இருபத்து நாலாம் தத்துவம் மூலப்பகுதி எனத் தொகை கொள்ளுவாருமெனப் பலதிறத்தர் ஆசிரியர். அவையெல்லாம் பொருளான் வேறுபாடின்மையின், தம்முள் முரணுமை அறிக'' எனச் சிவஞான பாடியத்து இரண்டாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்து வருவதும், '.....மனம் தோன்றி எதிர்ப்பட்ட தொரு விடயத்தை இஃது யாதாகற்பாற்றெனச் சித்தரூபமாய் நின்று சிந்தித்தும்' எனச் சிவஞான சித்தியார் 2;60–ஆம் திருவிருத்தவுரையில் வருவதும் அறியத்தக்கன.

குணதத்துவம் இருபத்து நாலாவது; பிரகிருதி தத்துவம் இருபத்தைந்தாவது. இவ்விரண்டினுள் பிரகிருதிதத்துவத்தின் காரியம் குணதத்துவம். குணதத்துவத்தின் காரியம் சுக துக்க மோகங்களும் முறையானே தனக்குக் கீழுள்ள புத்தி தத்துவ முதலிய இருபத்து மூன்று தத்துவங்களுமாம். பிருதிவிமுதல் பிரகிருதிவரை இருபத்தைந்து தத்துவங்களுக்கும் *அசுத்தாத்துவா என்று பெயர்.

உ. போசயித்திருகாண்டம்

இதற்குமேல் அராகதத்துவம். இதன் தொழில் விடயங்களில் ஆசையைப் பெருக்குதலாம். [1] இதற்கு மேல் வித்தியாதத்துவம். இதன் தொழில் விடயத்திற் பற்றிய புத்தியைப் புருடனிடத்திற் கொண்டு செலுத்தும் கருவியாதல். இதற்குமேல் கலாதத்துவம். இதன் தொழில் ஆன்மாக்களுக்கு அநாதியே செம்பிற் களிம்பு போலச் சகசமான மலசத்தியிற் சிறிது நீக்கி ஆன்ம ரூபத்தை விளக்குதல். இதற்குமேல் நியதிதத்துவம். இதன்தொழில் ஆன்மாக்கள் அவரவராற் செய்யப்பட்ட கன்மம் அவரவரே நுகரப்படுமென நியமித்தல். இதற்குமேல் காலதத்துவம். இதன் தொழில் நெடுங்கால நுகர்ந்தான் சிறிதுகால நுகர்ந்தான் எனப் புருடனுக்குப் போகத்தை வரையறுத்தல். இதற்குக் காரணம் மாயாதத்துவம்.

---

*இதுகாறும் கூறப்பட்ட தத்துவங்களும் அவற்றின் இயல்புகளும் சிருட்டிக்கிரமத்தில் சிவஞானசித்தியார் 2–ஆம் சூத்திரம் 58 முதல் 66 முடியவுள்ள திருவிருத்தங்களிற் கூறப்படுதல் அறியத்தக்கது.

1. முதனூலிலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் அராக தத்துவத்தின் பின் நியதி கால தத்துவங்களைக் கூறிவிட்டுப் பின் வித்தியா கலா தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இங்கே சிவஞான சித்தியார் 2:54 முதல் 56 முடியவுள்ள திருவிருத்தங்களில் சிருட்டிக் கிரமத்திற் கூறப்பட்டவாறு அம்முறை மாற்றி அமைக்கப்பட்டது.

[1]மாயாதத்துவத்தில் காலம் நியதி கலை வித்தை அராகம் இவ்வைந்தும் தோன்றும். இவ்வைந்தோடுங்கூடிப் புலன்களை நுகருமிடத்துப் பும்ஸத்துவம் என்ற ஒரு மலமுண்டாமாதலான் ஆன்மாவுக்குப் புருட தத்துவம் என்று பெயர். புருட தத்துவம் சடரூபம் அன்று. இங்ஙனம் கூறிய அராகம் முதல் கலை ஈறுகிய ஐந்து தத்துவங்களுக்கும் மிச்சிராத்துவா என்று பெயர்.

ஆக இவை முப்பது தத்துவங்களும் ஆன்மாக்களிடத்தில் தனித்தனி சூக்கும தேகங்களாயிருக்கும். புவனங்களில் தோன்றிய தேகங்களுக்கும், ஆதாரமாகிய புவனங்களுக்கும் ஆசிரயங்களாயிருப்பன சர்வான்ம சாதாரணங்களாகிய முப்பது தத்துவங்களுமாம். இவற்றிற்கெல்லாம் காரணம் [2]அசுத்தமாயா தத்துவம். இந்த மாயை நித்தமாய் வியாபகமாய் ஆன்மாக்களுக்கெல்லாம் கன்மத்தால் பந்திப்பதாய்த் தன் காரியமுகத்தான் ஞானக் கிரியைகளை விளக்குமாயினும் மயக்குவதாய் இருக்கும்.

ஈ. பிரேரகாண்டம்

இதற்கு மேல் முப்பத்திரண்டாவது சுத்த வித்தியா தத்துவம்.இதற்கு மேல் முப்பத்து மூன்றுவது ஈசுர தத்துவம். சுத்த வித்தியா தத்துவத்தில் [3]சத்தகோடி மகாமந்திரர்களும்

1. மாயையினின்று முறையே காலமும் நியதியும் கலையும், கலையின் வித்தையும், வித்தையின் அராகமும் தோன்றும் எனச் சிவஞான சித்தியார் கூறியிருப்ப, இங்கே கால முதலிய ஐந்தும் மாயா தத்துவத்தில் தோன்றும் என்றது பரம்பரையான் மாயை முதற்காரணமாதலீபற்றி. இக்கருத்துப்பற்றியே சிவப்பிரகாசத்தில் 'வித்தை அராகங்களும் மாயை தனிலாகும்' என்றதாகும். சிவஞானபாடியம் 2–ஆம் சூத்திரம் 2–ம் அதிகரணப் பகுதி அறியத்தக்கது.

2. அசுத்தமாயையின் இலக்கணம் சிவஞான சித்தியார் 2:53ம் திருவிருத்தத்திற் கூறப்பட்டிருக்கிறது.

3. சத்தகோடி மகாமந்திரர்கள் ஏழுகோடி எண்ணிக்கை யுள்ளவர்கள்; இவர்கள் வித்தைகளென்றும் பெயர் பெறுவர்.இரத்திரனத்திரயத்து 24,25–ம் சுலோகங்கள் அறியத்தக்கன.

[1]காமிக முதலிய இருபத்தெட்டாகமங்களும் சித்தாந்த சாத்திரத்தால் பூசிக்கப்படா நின்ற [2]நந்தி முதலிய கணநாதர் எண்மரும் [3]இந்திரன் முதலிய உலகபாலரும் [4]வச்சிரம் முதலிய இவர்கள் ஆயுதமும் இருக்கும். ஈசுரதத்துவத்தில் [5]அனந்தர் முதலிய வித்தியேசுரர் எண்மரும் இருப்பர். இவர்களுள் அனந்ததேவர் ஏனை வித்தியேசுரருக்கும் சுத்தவித்தியா தத்துவவாசிகட்கும் மற்றவர்கட்கும் தலைவராய் மாயையைக் கலக்கி மாயாதத்துவ புவனங்களை உண்டாக்குவர். இந்த அனந்தர் பரமசிவத்திற்கு வேறாய் அதிகாரமலம் ஒன்றும் உடையராய் இருப்பர். பாகம் வந்தகாலத்திற் பரமசிவத்தின் அருளால் பரமுத்தியை அடைவர்.

1.காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்களாவன:– காமிகம்,யோகஜம்,சிந்தியம்,காரணம்,அஜிதம்,தீப்தம்,சூக்ஷுமம்,சகஸ்ரம், அம்சுமான்,சுப்பிரபேதம்,விஜயம், நிச்சுவாசம்,சுவாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம் என்பன. இவ்வாறு ஸ்ரீகாமிகாகமத்தில் தந்திராவதார படலத்திற் கூறப்பட்டது.

2. நந்தி முதலிய கணநாதர் எண்மராவார்:– நந்தி, மகாகாளர், விநாயகர், இடபதேவர், பிருங்கி, சுப்பிரமணியர், உமாதேவி, சண்டேசுவரர் என்பவர்.

3. இந்திரன் முதலிய உலகபாலராவார்:– இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், விஷ்ணு, பிரமன் என்பவர்.

4. வச்சிர முதலிய ஆயுதங்களாவன:– வச்சிரம், சக்தி, தண்டம், கத்தி, பாசம், சித்திரத்துவசம், கதை, சூலம், சக்கரம், வெண்டாமரை என்பன.

5. அனந்தர் முதலிய வித்தியேசுவரரெண்மராவார்:– அனந்தர், சூக்ஷுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி என்பவர்.

ஆணவம் கன்மம் என்னும் இருமலமுள்ள [1]பிரளயாகலருள் மலபரிபாகமுடையோராய் நிரதிகரணமாய்ப் பரமசிவன் அனுக்கிரகம் செய்யப் பெற்றவர் [2]நூற்றுப்பதினெட்டு உருத்திரர். இவருள் ஸ்ரீகண்ட ருத்திரர் மத்தியப் பிரளயமுடிவில் பிரகிருதி தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட தத்துவங்களையும் புவனங்களையும் உண்டாக்கி ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடைய சகலருள் ஞானத்தாலும் யோகத்தாலும் தவத்தாலும் தியானம் முதலியவற்றாலும் சிறந்தவரைப் பிரமபதம் விண்டு பதங்களில் இருத்துவர். இந்த ஸ்ரீகண்டருத்திரர் மத்தியப் பிரளய காலத்தில் அராகதத்துவத்தில் இருப்பர். பின்பு படைப்புக் காலத்தில் அசுத்தாத்துவாக்களைப் படைத்துப் பிரமாவும் விண்டுவும் செய்யும் சிருட்டிகளை அதிட்டித்து நின்று கீழ்ப்பட்ட புவனேசுவரையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் பிரமாண்ட முதலிய அண்டங்களையும் உண்டாக்குவர். பிரமாண்டத்தில் [3]பதினான்குபுவனம் [4]சகலருக்கிருப்பிடமாம்.

முன்சொன்ன உருத்திரருள் நூறு உருத்திரர் பாஞ்ச பௌதிகமான பிரமாண்டத்திற்குக் காவலாயிருப்பர். பிரமா விட்டுணுக்களுடனே கூடக் குண தத்துவத்திலிருக்கும் ஸ்ரீகண்ட

கணநாதர் முதலியவர்களின் பெயர் ஸ்ரீகாமிகாகமத்தில் அர்ச்சனவிதி படலத்திற் கூறப்பட்டது.

1.பிரளயாகலர்:– ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலமுடையவர்கள்.

2.நூற்றுப் பதினெட்டு உருத்திரராவார்:– பிரமாண்டத்தின் பத்துத் திக்கிலும் திக்குக்குப் பதின்மராகவுள்ள நூறு உருத்திரரும், பிரகிருதி மத்தகத்தில் உள்ள குரோதர் முதலிய எண்மரும், கலை மத்தகத்தில் வசிக்கும் கஹநேசர் முதலிய எண்மரும், ஸ்ரீகண்டருத்திரரும், வீரபத்திரரும் என்னும் இவர். (தத்துவப் பிரகாசம் 14–வது சுலோகம்).

3. பதினான்கு புவனம்:– கீழேழு மேலேழு என்று சொல்லப்படும் பதினான்குமாம்.

4. சகலர் – ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலமும் உடையவர்கள்.

ருத்திரர் மத்தியப் பிரளயம் வரையிலும் அதிகாரம் செய்து கொண்டிருந்து பின்பு அந்தப் பிரமாவிட்டுணுக்களையும் ஒடுக்கிக் கொண்டு தாம் மிச்சிராத்துவாவில் அராகதத்துவத்திலிருப்பர். இவரோடே கூட வீரபத்திரரும் இருப்பர். பிரகிருதி மத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். கலை மத்தகத்தில் எட்டு உருத்திரர் இருப்பர். இவர்களோடு முன்சொன்ன ஸ்ரீகண்டர் வீரபத்திரர் சத உருத்திரருமாக நூற்றுப் பதினெட்டு உருத்திரரும் பரமசிவன் அனுக்கிரகத்தால் பரமுத்தி அடைவர்.

இந்த நூற்றுப் பதினெட்டு உருத்திரரும் மலபரிபாகத்தால் தீக்கைபெற்று, பரமசிவன் அருளால் பதங்களைப் பெற்றவர். சுத்தவித்தியா தத்துவத்திலிருப்போர் மலபரிபாகத்தால் பரமசிவன் அருளால் பதம் பெற்றவர். இச்சுத்த வித்தியாதத்துவ வாசிகள் சரீரமும் வித்தியேசுரர் சரீரமும் வைந்தவம். நூற்றுப் பதினெட்டு உருத்திரர் சரீரம் மாயேயம். பிரமா விட்டுணு முதலியோர் சரீரம் பிரகிருதி சம்பந்தம். பரமசிவனுடைய எல்லாத் திருமேனியும் நூற்றுப் பதினெட்டு உருத்திரர் வடிவும் வித்தியேசுரர் வடிவும்போலத் தியானிக்கப்படும். பிரமா விட்டுணு சரீரம் பிராகிருதமாகலானும் முன் பரமசிவன் அனுக்கிரகம் இல்லாமையானும் பிரம விட்டுணுக்கள் சரீரம்போலப் பரமசிவனைத் தியானிக்கலாகாது. பிரம விட்டுணுக்கள் பதம் பசுத்தானம். உருத்திரர் பதம் [1]ஈசுரர் பதம் இரண்டும் பதித்தானம்.

இந்த ஈசுரதத்துவத்திற்கு மேல் சதாசிவ தத்துவம். இதற்குமேல் சத்திதத்துவம். இதற்குமேல் சிவதத்துவம். [2]இந்த ஐந்து தத்துவமும் பரமசிவனுக்கு முறையே அதிகாரத்துவம் போகத்துவம் இலயத்துவமெனப் பெயர் பெறுதற்கு நிமித்தமாயிருக்கும்.

---

1. ஈசுரர் – வித்தியேசுரர்.

2. இத் தத்துவங்களின் இயல்பு சிருட்டிக் கிரமத்தில் சிவஞானசித்தியார் 1:65,66–ம் திருவிருத்தங்களிற் கூறப்பட்டன. ஆண்டு 'நித்தமென்றுரைப்பர் கால நீங்கிய நிலைமையாலே, வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே' என வருதலின்

இந்தத் [1]தத்துவங்களைந்தினும் பரமசிவன் ஒழிய வேறே கிருத்தியஞ்செய்யும் ஆன்மாக்கள் இல்லை. இலயம் போகம் அதிகாரம் என்னும் பதங்களை விரும்பிச் சாதகதீக்கை பெற்று மந்திரங்களைச் சாதித்த சாதகர், பின்பு பரமசிவனருளால் அந்தப் புவனத்தை அடைந்து போகம் நுகர்ந்து வைராக்கியம் வருமளவாதல் மகாசங்காரம் வருமளவாதல் இருந்து பின்பு வித்தியேசுவரருடனே கூடப் பரமுத்தியைப் பெறுவர்.

சுத்தவித்தியாதத்துவத்தில் [2]அகரமுதலிய ஐம்பத்தோ ரக்கரமும் காமிக முதலிய இருபத்தெட்டுச் சங்கிதைகளும்

தத்துவப் பிரகாசத்தில்,

‘ पञ्चानामप्यो न हि क्रमोऽस्तीहकालहितत्वात् ।
व्यापारवशादेषां विहिता खलुकल्पना शास्त्रे ॥ (32)

எனவரும் சுலோக வியாக்கியானத்தில், அகோரசிவாசாரியர் ‘सेयं अशास्त्रज्ञैः प्रक्षिप्तेत्युपेक्षैव’ என்று கூறும் குற்றம் பொருந்தாமை அறியப்படும்.

1. சில ஏட்டுப் பிரதிகளில் “ एतत् तत्वत्रितयं ’ என்றும் ‘இந்த மூன்று தத்துவமும்’ என்றும் பாடம் காணப்படுகின்றது. சிவஞானபாடியத்து 2:2–ஆவது அதிகரணத்தில் சுத்தமாயா காரியம் கூறுமிடத்துச் ‘சிவதத்துவம்...இலயித்த மாத்திரையாய் நிற்றலின் இலயதத்துவம்’ எனவும், ‘சத்தி தத்துவம்...சிவதத்துவத்தின் இயல்பை நோக்கத் தூலமாகலின் தூல லயதத்துவம்’ எனவும், ‘சதாசிவதத்துவம்...போகமென்னும் அவத்தையுடைமையின் போகதத்துவம்’ எனவும், ‘ஈசுரதத்துவம்... சூக்கும அதிகாரதத்துவம்’ எனவும், ‘சுத்தவித்தியாதத்துவம்– தூலவதிகாரதத்துவம்’ எனவும் கூறப்படுதலின், ‘ஐந்து’ எனக் கொள்ளப்படினும், ‘...இக்கருத்தே பற்றிச் சிவாகமங்களிற் சிவம் சத்தி சதாசிவம் என்னும் மூன்று தத்துவமுமே முதல்வனது இலய போக அதிகாரங்கட்கு முறையே இடமாமென்றும்...கூறுமெனக் கொள்க’ என வருதலின் அந்தப் பாடமும் பொருந்தும்.

2. அகரமுதலிய ஐம்பத்தோரக்கரம்–அகரம் முதல் க்ஷகரம் இறுதியாகவுள்ளவை.

[1]வைகரிவடிவாயிருக்கும். ஈசுரதத்துவத்தில் பிரணவம் இருக்கும். சதாசிவ தத்துவத்தில் சகல விந்துவும் சகல நாதமும் இருக்கும். சத்திதத்துவத்தில் [2]சூக்குமை என்னும் பெயருடைத்தாய்ப் புத்தி காரணமாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறுகிய சூக்கும நாதம் இருக்கும். சிவதத்துவத்திற்குக் காரணம் விந்து. விந்துவுக்கும் சிவதத்துவத்திற்கும் வேறுபாடில்லை. சிவதத்துவங்களை அதிட்டித்து நிற்கும் பரமசிவனுடைய சத்தி, சகளம் சகளநிட்களம் நிட்களம் எனவும், வியத்தம் வியத்தாவியத்தம் அவ்வியத்தமெனவும், மகேசுரன் சதாசிவம் சிவன் எனவும் பெயர் பெற்றிருக்கும்.

இந்த முப்பத்தாறு தத்துவங்களுள் விந்துவானது நித்தியமாய் வியாபகமாய் அருவமாய்ப் பரமசிவனுலே நித்தியம் அதிட்டிக்கப்படுவதாய்ச் சொல்வடிவும் பொருள்வடிவுமாய் நாதம் முதலியவற்றின் வழியால் ஆன்மாக்களுக்கு அறிவு விளங்குதற்குக் காரணமாய் மயக்கஞ் செய்யாததாய் மாயாகாரியம் ஒழிந்த எல்லாப் பொருட்கும் உபதானகாரணமாய்ச் சடமாயிருக்கும்.

---

1. வைகரி: நால்வகை வாக்கினிலொன்று. அதன் இலக்கணம், 'வைகரி செவியிற் கேட்ப தாயத்த வசனமாகி, மெய்தகு முதான வாயு மேவிட விளைந்த வன்னம், பொய்யற வடைவு டைத்தாய்ப் புந்திகா ரணம தாகி, ஐயமில் பிராண வாயு வடைந்தெழுந் தடைவு டைத்தாம்' (சித்தியார் 1:20) என்பதால் அறியலாம். இரத்தினத்திரயத்து 72,73–ம் சுலோகங்களும் அறியத்தக்கன.

2. சூக்குமை–சூக்குமவாக்கு. அதனிலக்கணம்சிவஞான சித்தியார் 1:23–லும், இரத்தினத் திரயம் 76,76$^{1}/_{2}$ சுலோகத்திலும் கூறப்பட்டிருக்கிறது. சூக்கும வாக்காகிய நாதத்திற்குப் பற்றுக்கோடு சிவதத்துவமாயினும், 'சத்தி தத்துவம் சிவதத்துவத்தின் வேறன்மையான்' அது சத்தி தத்துவத்திலுள்ளதாகக் கூறப்பட்டது.

3. [1]அத்துவாப்பிரகரணம்

இங்ஙனம் கூறப்பட்ட பிருதிவிமுதல் சிவதத்துவம் ஈறுகிய முப்பத்தாறு தத்துவங்களும் தத்துவாத்துவா. காலாக்கினி புவனம் முதல் அணுசிருதபுவனம் ஈறுகிய [2]இருநூற்று இருபத்து நான்கு புவனங்களும் புவனத்துவா. அகரமுதலிய ஐம்பத்தோரக்கரங்களும் வன்னத்துவா. வியோமவியாபி மந்திரவடிவான எண்பத்தொரு பதமும் பதாத்துவா. மூலப்பிரமாங்கங்களாகிய பதினெரு மந்திரமும் மந்திராத்துவா. நிவிர்த்தி முதலிய பஞ்சகலைகளும் கலாத்துவா.

---

1. அத்துவா – வழி. 'அத்துவா எனினும் வழி எனினும் ஒக்கும். இவையே ஒரோவொன்றுகக் கழித்துக் கொண்டு சிவபதத்திற்சேறற்கு வழி போறலின், அத்துவா எனப்பட்டன' (சிவஞானபாடியம் 2:3) 'வழுவிலா வழியாரும்' என்பது சிவஞானசித்தியார் 8:6.

2. சில பிரதிகளில் " **'कालाग्निभुवनमारभ्य अनाश्रित-भुवनपर्यन्तां भुवनानि द्विशतं पञ्चत्रिंशत् भुवनाध्वा'** எனவும் 'காலாக்கினி புவன முதல் அநாசிருத புவனமீருகிய இருநூற்று முப்பத்தஞ்சு புவனங்களும் புவனத்துவா' எனவும் பாடம் காணப்படுகின்றன. சிவஞான சித்தியாரில் 'புவன நூற்றெட்டு', 'புரமைம்பத்தாறு', 'புரம் இருபத்தேழு', 'புரம்பதினெட்டு', 'புரம் மூவைந்து' (8:7,8 9) எனக் கூறப்பட்டிருப்பதாலும். இரத்தினத் திரயத்திலும் **'पुराण्यष्टोत्तरशतं', 'वामादिभुवनानाञ्च विज्ञेयास्सप्तविंशतिः' 'दशाष्टौभुवनानि', 'पुराणि दशपञ्च च'** (90,99,105,109,114 சுலோகங்கள்) எனக் கூறப்பட்டிருப்பதாலும், சிந்தியாகமத்தில் "' **इत्येकादशमन्त्रेस्यादे-काशितिपदं भवेत। अक्षरस्त्वेकपञ्चाशत् चतुर्विंशशतद्वयं। षट्त्रिंश-त्तत्वमेवंहि कला पञ्चकमुच्यते** " மந்திரங்கள் பதினென்று, பதங்கள் எண்பத்தொன்று, அக்ஷரங்கள் ஐம்பத்தொன்று, புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு, தத்துவங்கள் முப்பத்தாறு, கலைகள் ஐந்து எனக் கூறப்பட்டிருப்பதாலும் இருநூற்றிருபத்துநான்கு என்ற பாடம் கொள்ளப்பட்டது. ஆயினும்

இவ்வாறனுள் கலை தத்துவம் புவனம் என்னும் மூன்று அத்துவாக்களும் நிரவிய வடிவாயிருக்கும். வன்னம் பதம் மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் ஒலிவடிவாயிருக்கும். இவற்றுள் புவனம் தத்துவத்தைப் பற்றி நிற்கும். தத்துவம் கலையைப் பற்றி நிற்கும். வன்னம் பதம் மந்திரம் என்னும் மூன்று அத்துவாக்களும் புவனத்தில் தோன்றிய சரீரங்களைப் பற்றி நிற்கும். இந்த அத்துவாக்கள் ஆறுக்கும் மேலாகிய காரணம் சுத்தமாயை என்றுரைக்கப்படும். சுத்தமாயை, *குண்டலினி, சுத்தவித்தியை, பிரமம் என்பன ஒருபொருட் கிளவி. அங்ஙனமே அசுத்தாத்துவாவுக்கு மேலாகிய காரணம் அசுத்தமாயை என்று உரைக்கப்படும். இவ்வத்துவாக்கள் ஆறும் ஆன்மாக்களுக்குப் பந்தமாயிருக்கும்.

4. ஆத்மப்பிரகரணம்

ஆன்மாக்கள் ஆறு அத்துவாவுக்கும் வேறும் நித்தியமாய் வியாபகமாய்ச் சேதனமாய்ச் சரீரந்தோறும் வெவ்வேறும் வினைகளைச் செய்து வினைப் பயன்களை நுகர்வோராய்ச் சிற்றறிவுஞ் சிறு தொழிலும் உடையவராய்த் தமக்கொரு தலைவனை

'இன்னும் சில புவனங்கள் உளவென்றும், உளவாகவே அவையும் உளப்படப் புவனத்துவா இருநூற்று முப்பத்தாறும்' என்றும் மூலப்பகுதி முதலியவற்றின் வேறும் சில புவனங்கள் உளவென்பது மிருகேந்திரத்திற் கூறப்பட்டது என்றும் சிவஞான பாடியம் 2:3–ம் அதிகரணத்துக் கூறப்படுதலின் அப்பிரதிகளிற் காணப்படுவதும் பொருந்தும்.

1'शब्दतत्वमघोषा वाग्ब्रह्म कुण्डलिनीध्रुवं । विद्याशक्तिः परानादो महामायेतिदेशिकैः । (70,) बिन्दुरेवं समाख्यातो व्योमानाहृतमित्यपि '

" என்பது இரத்தினத்திரயத்திற் கூறப்பட்டது.

உடையவராயிருப்பார். இந்த ஆன்மாக்கள் பந்தவேறுபாட்டால் ✪சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படுவர்.

5. பந்தப்பிரகரணம்

இவர்களுக்கு மாயாபந்தமாவது: கலைமுதல் பிருதிவி ஈறுன தத்துவங்களும் புவனங்களும் புவனத்துப் பொருள்களுமாயிருக்கும். கன்மபந்தமாவது: சோதிட்டோமம் பிரமகத்தி முதலியவற்றால் உண்டாவதாய் அபூர்வம் என்னும் பெயரையுடைய வாதனையாய்ப் புரியட்டகத்துள் புத்திதத்துவத்தைப் பற்றிச் சுக துக்க மோகவடிவாயிருக்கும். மலபந்தமாவது: ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை மறைப்பதாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறுய்த் தத்தம் காலவரையில் நீங்கும் அநேக சத்திகளை உடைத்தாய் நித்தமாய் வியாபகமாய்ச் சடமாயிருக்கும். சுத்தமாயா பந்தமாவது: வித்தைகள் வித்தியேசுரர் முதலியோர் சரீரங்கட்குக் காரணமாயும் சகலர் போகம் புசித்தற்குக் கருவியாகிய சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி என்னும் வாக்குக்களுக்கு ஏதுவாயுமிருக்கும். திரோதசத்திபந்தவது: மாயை கன்மம் ஆணவம் வைந்தவம் என்னும் நால்வகைப் பாசத்தினுடைய அநாதித்தன்மை நிகழ்வதற்கு ஏதுவாயிருக்கின்ற சிவசத்தியே பாசமென்று உபசரித்துக் கூறப்படும். இங்ஙனம் ஐவகைப் பந்தங்களும் கண்டுகொள்க.

✪சகலர், பிரளயாகலர் இவர்களது இலக்கணம் முற்குறிப்பில் கூறப்பட்டது. விஞ்ஞானகலர்–ஆணவ மலமாத்திரம் உடையவர். பிரளயாகலர் விஞ்ஞானகலரின் பாகுபாடு சிவஞானபாடியத்திற் கூறப்பட்டது.

சுத்தாத்துவாவிலிருப்போர் வைந்தவம் திரோதம் என்னும் இரண்டு பாசமுடையர். மிச்சிராத்துவாவில் இருப்போர் இந்த இரண்டு பாசத்தினுடனே ஆணவமும் கன்மமுமாக நான்கு பாசமுடையர். அசுத்தாத்துவாவில் இருப்போர் அந்த நான்குடனே மாயேயமுங்கூட ஐவகைப் பாசமும் உடையர். இவருள் சுத்தாத்துவாவில் இருப்போர்க்கு முத்தரைப்போல நிரதிசய இன்பமே அன்றித் துக்கத்தோடு கூடிய சுகதுக்க மோகங்கள் இல்லாமையால் அந்த அத்துவா சுத்தம் என்று சொல்லப்படும். [1]மிச்சிராத்துவாவில் இருப்போர்களில் [2]நிரஞ்சனர் ஒழிய அஞ்சனமுடையோர் தம் எல்லேயளவும் முற்றுணர்வு உடையராயினும் சுகதுக்க மோகங்களுடையராதலின் அந்த அத்துவா மிச்சிரம் என்று சொல்லப்படும். அசுத்தாத்துவாவிலிருப்போர்களுள் நிரஞ்சனர் ஒழிய அஞ்சனமுடையோரில் சிலர் தம் எல்லேயளவும் முற்றுணர்வுடையோராயினும் மற்றுள்ளோரெல்லாம் சிற்றறிவும் சிறுதொழிலும் சுகதுக்க மோகங்களுமுடையராதலின் இந்த அத்துவா அசுத்தம் என்று சொல்லப்படும். இவற்றுள் மாயேயமும் வைந்தவமும் ஆதிபந்தம். கன்மம் [1]பிரவாகாநாதியாய்ப் போகந்தாலழிவதாம். ஆணவம் மூலமாய் அநாதிபந்தமாய்த் தன்பாக முடிவில் பரமசிவன் திருவருளாகிய தீக்கையால் நீங்குவதாம். கன்மபாசம் ஞானத்தாலும் யோகத்தாலும் சந்நியாசத்தாலும் போகத்தாலும் நசிக்கும்.

---

1. மிச்சிரம் – கலப்பு. அஃதாவது சுத்தமும் அசுத்தமும் கலந்தது.

2. அஞ்சனம் – மலம்; அஃதில்லாதவர் நிரஞ்சனர்.

1. பிரவாக அநாதி – நீரோட்டம் போல இடையருது வருவது.

6. சாஸ்திரப்பிரகரணம்

இந்த ஞான முதலாயின எல்லாம் சாத்திரவழியால் கிடைக்கும். அச்சாத்திரங்கள் [1]லௌகிகமும், வைதிகமும், அத்தியான்மிகமும், அதிமார்க்கமும், மாந்திரமும் என ஐவகைப்படும்.

அவற்றுள் லௌகிகமாவன:– [2]ஆயுள்வேதமும் [3]தண்டநீதியும் முதலாயின. இவை இம்மையிற் பலிக்கும் நூல்கள்.

வைதிகநூலாவன:– வேதங்களில் கிரியாகாண்டத்தை மேற்கொண்டு [4]சோதிட்டோமம் முதலிய புண்ணியங் களாற்பெறப்படும் துறக்க முதலியவற்றை சாதிப்பதாகிய

---

1. ' लौकिकं वैदिकंचैव तथाध्यात्मिकमेव च। अतिमार्गञ्च मन्त्राख्यं तन्त्रमेतदनेकधा।'

"

என்பது ஸ்ரீகாமிகாகமத்துத் தந்திராவதார படலத்திற் கூறப்பட்டது. 'சைவாகமங்களில் உலகநூல் வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் மாந்திரம் என நூல்களை ஐவகைப்படுத்து' என்பது சிவஞானபாடியம் சிறப்புப் பாயிரவுரைப்பகுதி.

2. 'எல்லாம் அனுட்டித்தற்குச் சாதனமான யாக்கையை நோயின்றி நிலைபெறச் செய்வது ஆயுள்வேதம்' (சிவஞானபாடியம், முதற்சூத்திரம், முதல் அதிகரணம்) இஃது உபவேதம் நான்கனுள் ஒன்று.

3. தண்டநீதி – ஆசார வியவகார பிராயச்சித்தங்களை விதிக்கும் மிருதிநூல்: 'அவ்வவ் வருணங்கட்கும் நிலைக்குமுரிய தருமங்களை உணர்த்துவது மிருதிநூல்' (சிவஞானபாடியம், முதற்சூத்திரம், முதல் அதிகரணம்.) இது வேதத்திற்கு உபாங்கம் நான்கனுள் ஒன்று.

4. சோதிட்டோமம் – ஒரு வேள்வியின் பெயர்.

மீமாஞ்சை நூலும், வேதம் ஒரு புருடனுற் செய்யப்பட்டதெனச் சாதித்துப் பிரமாண முதலிய பதார்த்தங்களை ஆராய்ச்சி செய்யும் முனிவரால் செய்யப்பட்ட ✪நியாயநூலும், வைசேடிக நூலும் என மூன்று வகைப்படும். இந்த மூன்றும் இம்மையினும் மறுமையினும் பலிக்கும் நூல்கள்.

அத்தியான்மிகநூலாவன:– சாங்கியம், பாதஞ்சலம், வேதாந்தம் என மூவகைப்படும். அவை உபநிடதங்களை எடுத்துக்காட்டி இருடிகளாற் செய்யப்படுவனவாய் ஆன்மஞானத்தைப் பலிப்பிக்கும் நூல்கள்.

அதிமார்க்க நூலாவன:– உருத்திரர்களாற் செய்யப்பட்ட பாசுபதம், காபாலம், மகாவிரதம் என்பன.

மாந்திர நூலாவது:– சிவன் அருளிச்செய்த சித்தாந்த சாத்திரம்.

---

1. இது பிரமாணவியல், கருமபேதவியல், அங்காங்கியியல், பிரயோகவியல், முறைமைப்பாட்டியல், பயனியல் (அதிகாரவியலுமாம்), மாட்டேற்றியல், ஊகவியல், விலக்கியல், பிரசங்கவியல் முதலாகிய அத்தியாயங்களை உடையது. இதிலுள்ள சூத்திரங்கள் இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தொன்று. இந்த நூலுக்குப் பாடியம் சபர முனிவராற் செய்யப்பட்டது. சூத்திரத்திற்கும் பாடியத்திற்கும் சிறுபான்மை வேறுபாடுகொண்டு பட்டாசாரியன் சூத்திரம்பற்றி வழிநூல் செய்தான்: பட்டன் மாணுக்கனுகிய பிரபாகரன் பாடியமதம்பற்றி வழிநூல் செய்தான். பட்டாசாரிய மதத்திற்கும் பிரபாகர மதத்திற்கும் உள்ள வேறுபாடு சிவஞானசித்தியார் பரபக்கத்தில் அறியத்தக்கது.

✪நியாயமும் வைசேடிகமும் தருக்கம் என்னும் பொதுப் பெயரான் வழங்கப்படும். நியாயநூல் ஐந்து அத்தியாயங்கள் உடையது. இதிலுள்ள சூத்திரங்கள் ஐந்நூற்று முப்பத்தொன்பது. வைசேடிகநூல்பத்து அத்தியாயங்களுடையது. இதிலுள்ள சூத்திரங்கள் முந்நூற்று எழுபத்து மூன்று.

இவற்றுள் மீமாஞ்சை நூல் செய்தவன் சைமினி பகவான். இந்நூல் வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி நித்தியமாயுள்ளது என்றும், பிரபஞ்சம் நித்தமென்றும், இட்டி முதலிய கன்மங்கள் செய்யவேண்டுமென்றும், கன்மம் செய்தவனுக்கு அந்த வினையே துறக்கம் முதலிய பலன்களைக் கொடுக்கும் என்றும், பௌதிக சரீரேந்திரியங்களுக்கு வேறாய் ஆன்மாக்கள் உண்டு என்றும், ஆன்மாக்கள் பலர் என்றும், இந்த ஆன்மாக்களுக்கு வேறாய் ஈசுரன் ஒருவன் இல்லை என்றும் கூறப்படும்.

இனி ✪வைசேடிக நூலில் பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்கு பூதங்களும் அநித்தியம் என்றும், இவற்றிற்குக் காரணம் அவ்வப் பெயர்களால் வேறுபட்ட பரமாணுக்கள் என்றும், இவற்றிற்கு வேறாய்ச் சத்தியத்திற்குக் காரணமாய் நித்தமாகிய ஆகாசம் ஐந்தாம்பூதம் என்றும், இதற்கு வேறாய்க் காலமும் திக்கும் ஆன்மாக்களும் நித்தமாய் அருவாய் வியாபகமாய் இருக்கும் என்றும், ஆன்மா பரமான்மாவும் சீவான்மாவும் என இருவகைப்படுமென்றும், பரமான்மா ஈசுரன் என்றும், சீவான்மா உடம்பு தோறும் வேறாய்ப் பலவாய் இருக்கும் என்றும் இவற்றிற்கு வேறாய்ப் பலவாய் நித்தமாய் அணுவாய் ஞானத்துக்கு ஏதுவாய் ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாய் இருப்பது மனம் என்றும், பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் காலம் திக்கு ஆன்மா மனம் என்னும் இவ்வொன்பதும் திரவியம்

✪வைசேடிகநூலிற் கூறும் பொருளாவன: திரவியம், குணம், தொழில், சாதி, விசேடம், சமவாயம், இன்மை என எழுவகைப்படும். இன்மை என்பது அபாவம். அது பிராகபாவம், பிரத்யும்சாபாவம், அத்தியந்தாபாவம், அந்யோந்யாபாவம் என நான்கு வகைப்படும். இவை தமிழில் முன்னின்மை, அழிவுபாட்டின்மை, என்றுமின்மை, ஒன்றுனென்றின்மை என வழங்கப்படும். இவற்றின் இலக்கணம் தருக்க நூல்களிற் காணப்படும். ஏனைய ஆறு பதார்த்தங்களும் இங்கே கூறப்பட்டிருக்கின்றன.

என்றும், இவற்றிற்கு வேருகிய சுக்கில முதலியன [1]குணபதார்த்தமென்றும், எழும்புதல் முதலிய கன்மபதார்த்தம் என்றும் குடத்தன்மை ஆடைத்தன்மை யென்றாற்போலும் சாதி சாமானிய பதார்த்தம் என்றும், நித்தப்பொருள்களின் வேறுபாடு உணர நிற்பது விசேடபதார்த்தம் என்றும், குடத்தில் குடத்தன்மை என்றாற்போலும் சம்பந்தம் சமவாயபதார்த்தம் என்றும், இவ்வறுவகைப் பதார்த்தங்களுள் ஆன்மா என்னும் பதார்த்தத்துக்கு மனத்தொடு சையோகத்தால் ஞானம் உண்டாமென்றும், அதனனே புண்ணிய பாவங்களாகிய கன்மானுட்டானம் உண்டாம் என்றும், அதனனே சுவர்க்க நரகங்கள் சரீரமுதலாயின உளவாமென்றும், எல்லாம் வல்லவன் ஈசுரன் என்றும், ஈசுரனுக்கு மனத்தோடு சையோகத்தால் ஞானம் உண்டாமன்றி இயற்கை ஞானமில்லை என்றும், இவ்வாறு பதார்த்தங்களுடைய பொதுவியல்பு வேற்றியல்புகளை அறியும் ஞானத்தால் ஆன்மாக்களுக்குக் கன்மம் நசிக்குமென்றும், கன்மம் நசிக்கவே மனத்தோடு சையோகத்தால் தோன்றும் ஞானமின்றிப் பாடாணம்போற் கிடப்பர் அதுவே முத்தி என்றும், வேதம் ஈசுரனுற் கூறப்பட்டதென்றும் சொல்லப்படும்.

இனி நியாய நூலில் பிரமாணம் முதலிய [2]பதார்த்தங்கள் பதினறு என்றும், பதார்த்த இலக்கணமும் முத்தி இலக்கணமும் வைசேடிக நூலிற் கூறியவாறே என்றும், ஈசுரன் செய்விப்பன் என்றும் கூறப்படும். இவ்விரண்டு நூலும் செய்தார் [3]கணுதரும் அக்கபாதரும் என உணர்க.

---

1. குணங்கள் உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்துநான்கு வகைப்படும்.

2. பிரமாண முதலிய பதார்த்தங்கள் பதினருவன: பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோஜனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, ஏத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகஸ்தானம் என்பன.

3. வைசேடிகநூல் செய்தவன் கணுத முனிவன். நியாய நூல் செய்தவன் அக்ஷபாதமுனிவன். இம்முனிவன் கௌதமப் பெயராலும் கூறப்படுவன்.

இனிச் [1]சாங்கியநூலில் பிரகிருதி நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப் பொருட்கும் காரணமாய்ச் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களும் சமமாய் நின்ற அவதரமாய் அருவாய் இருக்கும் என்றும், இந்தப் பிரகிருதி இருபத்து நான்காம் தத்துவம் என்றும், இந்தப் பிரகிருதியின் காரியம் புத்தி தத்துவமுதற் பிரகிருதிதத்துவமீறாக இருபத்து மூன்று தத்துவம் என்றும், இந்த இருபத்து நான்கு தத்துவங்களுக்கும் வேறாய் நித்தமாய் வியாபகமாய் அருவாய் [2]நானாபேதமாய் முற்றுணர்வும் தொழிலுமின்றி அறிவு மாத்திரமாயிருக்கும் ஆன்மாக்கள் இருபத்தைந்தாம் தத்துவம் என்றும், இந்த ஆன்மாக்களுக்கு முத்தி காலத்தும் பெத்த காலத்தும் வேற்றுமை இல்லை என்றும், சொரூபத்தில் அழுக்கில்லை என்றும், அநாதியே புத்தியைச் சார்ந்த அவித்தை வசத்தால் சுகதுக்க ஞானம் தோன்றும் என்றும், அதனால் பெத்தன் ஆயினன் என்றும், பிரகிருதியையும் புருடனையும் பகுத்தறியும் விவேக ஞானத்தால் அவித்தை நீங்கலே முத்தி என்றும், ஆன்மாக்களுக்கு வேறாய் ஈசுரன் ஒருவன் இல்லை என்றும் கூறப்படும். இந்த நூல் செய்தவன் கபிலமுனி.

இனிப் [3]பாதஞ்சலநூலில் பிரகிருதியும் [4]பிராகிருதங்களும் ஆன்மாக்களும் பெத்தமுத்திகளும் சாங்கிய நூலிற் கூறியவாறே என்றும் விவேகஞானம்போல யோகமும்

---

1. *சாங்கிய நூலில் கூறப்படும் சற்காரியவாதம் சைவம் முதலிய சற்காரிய வாத நூல்கட்கும், இதில் கூறப்படும் அத்தியாசவாதம் மாயாவாதத்திற்கும் உபகாரமாம். இந்த சாங்கியம் நிரீசுவர சாங்கியம். " 'विश्वं निरीश्वरमिदं जगदाह साङ्ख्यः ' " எனவரும் சுருதிசூக்திமாலையால் அது அறியப்படும்.*

2. *நானா – பல.*

3. *இது யோகசாஸ்திரம் என்றும் சொல்லப்படும்.*

4. *பிராகிருதம் – பிரகிருதியின் காரியம்.*

[1]யோகாங்கமும் முத்திக்குக் காரணமென்றும், இருபத்தாரும் தத்துவம் ஈசுரன் ஒருவன் உண்டென்றும், அவன் எல்லாவற்றையும் அதிட்டித்து நின்று செய்வோனுகலானும் ஆன்மஞானத்தை உபதேசிப்பவனுகலானும் ஆன்மாக்களுக்கு வேறு என்றும் கூறப்படும். இந்த நூல் செய்தவன் பதஞ்சலி பகவான்.

இனி *வேதாந்தவாதிகள்: பாற்காரியனும், மாயாவாதியும், சத்தப்பிரமவாதியும், கிரீடாப்பிரமவாதியும் என நான்கு வகைப்படுவர்.

இவருள் பாற்காரியர்; சுரர் நரர் விலங்கு முதலிய சடசித்துக்களெல்லாம் பிரமத்தினுடைய பரிணுமம் என்றும், இந்தப் பிரமம் சச்சிதானந்தமாய் நித்தமாய் வியாபகமாய் இருக்கும் அதுவே ஈசுரன் என்றும், பரிணமித்து விகாரப்பட்டதை அறியாமையினற் பந்தமாயிற்று என்றும், பாரமார்த்தத்தில் ஒரு பொருளே என்றும், வேதாந்தஞானத்தால் சரீரத்திற்கு வேருகிய ஆன்மரூபம் விளங்கும் என்றும், அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி என்றும் கூறுவர்.

இனி மாயாவாதிகள்: முன்சொன்ன பிரமமே பாரமாத்திகத்திலே மெய்ப்பொருள் என்றும், அஃது ஒழிந்து காணப்பட்ட பொருளெல்லாம் இப்பியில் வெள்ளிபோலப் பொய்ப்பொருள் என்றும், சகத்திற்கு உபாதானம் மாயை என்றும்

---

1. *யோகாங்கம் – இயமம் நியமம் முதலிய எண்வகை யோகவுறுப்புகள்.*

*வேதத்திற் கூறப்படும் கருமகாண்ட ஆராய்ச்சி செய்தற்கெழுந்த மீமாஞ்சை நூல் வேதாந்தமெனப்படும். பாசுபதமென்பது யோகப் பெயரால் சைவாகமங்கட்கும் ரூடிப்பெயரால் பாசுபதாகமங்களுக்கும் ஆமாறுபோல வேதாந்தமென்பது யோகப்பெயரான் வேதத்தின் முடிபாகிய உபநிடதங்களைக் கூறும்; ரூடிப்பெயரான் அவற்றை எடுத்துச் செய்த ஏகான்மவாத நூலைக் கூறும். ஆகவே, இங்கே வேதாந்தமென்றது ஏகான்மவாதமாம்.

*அந்த மாயை பிரமம் போல மெய்ப்பொருளும் அன்று முயற்கோடு போலப் பொய்ப்பொருளும் அன்று என்றும், மாயைக்கு வேறுகப் பிரமசொரூபம் நான் என்றும், வேதாந்த ஞானத்தால் அறிவது முத்தி என்றும் கூறுவர்.

இனிச் சத்தப்பிரமவாதிகள்: காரணமான பரப்பிரமம் பிரளய காலத்தில் சத்த வடிவாயிருக்குமென்றும் சட சித்துக்களாய்த் தோன்றியழியும் எல்லாப் பொருள்களும் சத்தத்தினுடைய விகாரம் என்றும், சத்தரூபமே முழுதும் என்று அறிவது முத்தி என்றும் கூறுவர்.

இனிக் கிரீடாப்பிரமவாதிகள்: முன் கூறப்படும் பிரமமே நான் என்றும், நான் ஒருபடித்தன்றிப் பல வகையாய் நானாவிதமான விகாரப் பொருள்களோடும் கூடி விளையாடுகின்றேன் என்றும், இவ்வாறு அறிவதே முத்தி என்றும் கூறுவர்.

இந்த நான்கு மதங்களுக்கும் நூல் செய்தவன் வேதவியாசன் என அறிக.

மீமாஞ்சை, வைசேடிகம், நியாயம், சாங்கியம், பாதாஞ்சலம், வேதாந்தம் என்னும் இவ் ஆறு நூலும் வைதிகசாத்திரங்கள். இவ்வாறனுள் வேதாந்தம் ஒன்றுமே அத்துவிதநூல்; ஏனை ஐந்தும் பேத நூல்கள்.

இந்த அறுவகை நூலும் அன்றி, வேதத்திற்குப் புறம்பான நூல்கள் நாத்திகநூல்கள்; அவையாவன: [1]உலோகாயதம், பௌத்தம், [2]ஆருகதமென மூவகைப்படும்.

அந்த மூன்றனுள் உலோகாயதநூலில்: காட்சி ஒன்றே பிரமாணம் என்றும், காட்சிப் பொருளாகிய பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்குமே மெய்ப்பொருள் என்றும், இந்த நான்கு

---

*மெய்ப்பொருளுமன்றுப் பொய்ப்பொருளுமன்றுய் இருப்பதை மாயாவாதிகள் அநிர்வசனீயம் என்பர்; அநிர்வசனீயம் – சொல்லொணாதது.

1. உலோகாயதமதம் சார்வாகம் என்றும் பெயர் பெறும்.

2. ஆருகதம், ஜைனம், சமணம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

பூதக்கூட்டமான சரீரமே ஆன்மா என்றும், உடல் வளர அறிவு வளரும் உடம்பு தேய அறிவு தேயும் என்றும், ஈசுரன் என்று ஒருவன் இல்லை என்றும், இம்மையில் சுகதுக்கங்களே சுவர்க்க நரகங்கள் என்றும், சரீரம் நசித்தால் மேலைக்கு ஆவதொரு வினை இருப்பது இல்லை என்றும், ஆதலால் உடம்பிற்கு வேருய் ஆன்மா ஒருவன் இல்லை என்றும் கூறப்படும். இந்த உலோகாயத நூல் செய்தவன் பிருகற்பதிபகவான்.

இனிப் [1]பௌத்தநூலில் பிருதிவி முதல் புத்திதத்துவம் ஈறுகத் தத்துவம் இருபத்துமூன்று என்றும், இவற்றுள் புத்திதத்துவம் பிரதானம் என்றும், பாஞ்சபௌதிகமான சரீரத்தில் புத்திதத்துவமே உள்ளது என்றும், இந்தப் புத்திதத்துவ முதலிய எல்லாப் பொருளும் [2]கணபங்கம் என்றும், இவ்வாறின்றித் [3]திரமாகிய ஆன்மா என்பதும் ஈசுரன் என்பதுமில்லை என்றும் கூறப்படும். இந்த நூல்செய்தவன் ஆதிபுத்தன். இந்த நூலிற் கூறப்படும் முத்தியாவது தண்ணீர் ஓட்டம் போல அநித்தியமாய் அனுபவிக்கப்படும் ஞானசந்ததியே மோக்ஷமாம். இன்பத் துன்பத் தொடர்ச்சியின்றிச் சுத்தமான ஞானசந்ததியே முத்தியென்பர் சிலர். முறைமுறையாய் வளராநின்ற தீபம் எண்ணெயும் திரியும் தேய்ந்தவிடத்துக் கெடுவதுபோல ஞானசந்ததியினது நாசமே முத்தி என்பாரும் உளர்.

இந்தப் பௌத்தர் [4]சௌந்திராந்தகன், வைபாடிகன், மகாயானிகன், மாத்தியமிகன் என்று நால்வகைப்படுவர். இவருள் ஒருசாரார் காணப்படும் பொருளெல்லாம் அசத்தியம்

---

1. பௌத்தநூல் திரிபிடகம் என்னும் பெயரால் கூறப்படும். அவை சுத்தபிடகம், விநயபிடகம், அபிதர்மபிடகம் என்னும் பெயரின.

2. கணபங்கம் – க்ஷணந்தோறும் அழிவது.

3. திரம் – ஸ்திரம்: நிலையாயுள்ளது.

4. சிவஞான சித்தியாரிலும் சிவஞான பாடியத்திலும் பௌத்தம் சௌத்திராந்திகம் யோகாசாரம் மாத்தியமிகம் வைபாடிகமென நால்வகைப்படும் என்று கூறப்படுதலின், இங்கே கூறிய மகாயானிகன் சௌந்திராந்திகனுதல் அறியப்படும்.

ஞானசந்ததி ஒன்றுமே சத்தியம் என்பர். மற்றெரு சாரார் இந்தப் பொருளனைத்தும் சத்தியமே கணபங்கம் என்பர்.

இனி [1]ஆருகதநூலில்: ஆருகதநூல் செய்தவன் அருகன் என்றெரு கடவுள் அநாதியே உள்ளவன் என்றும், சீவன் என்றெரு பதார்த்தம் அநாதியே குற்றமுடைத்தாயிருக்கும் என்றும், இச்சீவன் தூலதேகம் தேயத்தேயும் வளரவளரும் என்றும், மற்றை இந்திரியங்களும் உள என்றும், இவையெல்லாம் அத்திகாயம் நாத்திகாயம் என்று வழங்கப்படும் என்றும், ஆருகத நூற்பொருள் ஞானத்தாலும் அந்த நூலிற் கூறும் [2]சுடுபாறையிற் கிடத்தல் முதலிய தவங்களாகலும் சீவன் உயிர்க்கொலை முதலிய பாவங்கள் நீங்கி அருகன்போலக் குற்றந் தீர்ந்தவன் ஆவன் என்றும், இந்நூலும் இப்பதார்த்தமும் உண்டோ இல்லையோ என்று வினவினுல் உண்டாம் இல்லையாம் உண்டும் இல்லையுமாம் என்று [3]மூவகையாற் சொல்லப்படும் என்றும் கூறப்படும்.

உலோகாயதன், பௌத்தன், சமணன் என்னும் இம்மூவரும் ஆசாரமில்லிகளாகிய நாத்திகர். இவர் ஈசுரன் என்ற அநாதிப்பொருள் ஒன்றில்லை என்பர். இம்மதம் மூன்றும் வேதத்திற்குப் புறம். இவற்றிற்கு முன் கூறப்பட்ட ஆறு நூல்களும் வைதிக நூல்கள்.

---

1. *ஆருகதசமயத்தை அனுசரிப்பவர்கள் சுவேதாம்பரர் திகம்பரர் என இருவகைப்படுவர். மகததேசத்தில் தங்கியவர்கள் வெள்ளாடை தரித்தமையின் சுவேதாம்பரர் எனவும், கர்நாடகம் சென்றவர்கள் பழைய நிர்வாணக் கோலமே தாங்கினமையின் திகம்பரரெனவும் வழங்கப்பட்டாரென ஆர்.சி.தத்தர் கூறுகின்றார். இவர்கட்கு நூல் பன்னிரண்டு அங்கங்கள் என்ப.*

2. *சுடுபாறையில் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய தவம் நிர்ச்சர பதார்த்தம் எனப்படும.*

3. *இம்மூன்றனோடு சொல்லொணாததாம் என்பதும் கூட்டி ஏழுவகையால் கூறப்படும். 'ஆம் என்பது ஈண்டுச் சற்றென்னும் பொருட்டாயதோரிடைச்சொல்' என்பது சிவஞான பாடியம் அவையடக்கம். இவ்வாறு கூறுவது சப்தபங்கி நியாயம் எனப்படும்.*

இந்த ஆறுக்கும் பிறப்பிடமாகிய வேதங்கள்: இருக்கும் எசுரும் சாமமும் அதர்வணமும் என நால்வகைப்படும்.

இவைகளுக்கு அங்கமாவன; சந்தோபிசிதியும், கற்பசூத்திரமும், சிக்கையும், வியாகரணமும், நிருத்தமும், சோதிடமும் என ஆறு வகைப்படும்.

வேதத்திற் கூறப்படும் விதிவிலக்குகளைப் பற்றிப் பிராமணர் முதலிய சாதிகளையும் பிரமசாரி முதலிய ஆச்சிரமங்களையும் விதிப்பதும், உபநிடதங்களைப் பற்றிப் பிரகிருதி புருடன் ஈசுரன் இலக்கணங்களைக் கூறுவதும், வேதத்திற் பெறப்படும் ஒழுக்கம் வழக்கு தண்டங்களை நியமிப்பதும் செய்வனவாகிய [1]மனு முதலிய தருமசாத்திரங்கள் பதினெட்டு வகைப்படும். இந்த மிருதிகளைச் செய்தவர் மனு முதலிய இருடிகள்.

இனி வாசுதேவனுற் செய்யப்பட்ட [2]பாஞ்சராத்திரத்தில்: இருபத்துநான்காம் தத்துவமாகிய குணதத்துவத்திற்கு மேல் இருபத்தைந்தாம் தத்துவம் வாசுதேவன் என்றொரு பரம்பொருள் உண்டென்றும், அப்பரம்பொருளினின்றும் கிருட்டினனும் அனிருத்தனும் மகரத்துவசனும் ரௌகிணேயனும் என்ற நான்கு வியூகங்கள் சகத்தைப் படைத்தற்பொருட்டுத் தோன்றுமென்றும், இந்த நான்கு வகுப்பினுல் சடமும் சித்தும் ஆகிய எல்லா உலகும் படைக்கப்பட்டன என்றும், வேதாந்தவாதிகள் நால்வரில் பரிணமவாதி சொல்வது போல எல்லாம் வாசுதேவன் வடிவு என்றும், வேதங்களில் உறுதிப்பயன் இல்லை பாஞ்சராத்திரத்தில் உறுதிப்பயன் உண்டு என்றும், ஆகையால் பாஞ்சராத்திரத்தின்

---

1. மிருதி பதினெட்டாவன: மனுஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி, தக்ஷஸ்மிருதி, யமஸ்மிருதி, கௌதமஸ்மிருதி, அங்கிர ஸ்மிருதி, யாக்ஞவல்க்ய ஸ்மிருதி, பிரசேதஸ ஸ்மிருதி, சாதாதப ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, சம்வர்த்த ஸ்மிருதி, உசனஸ்மிருதி, சங்கஸ்மிருதி, விகிதஸ்மிருதி, அத்திரிஸ்மிருதி, விஷ்ணு ஸ்மிருதி, ஆபஸ்தம்பஸ்மிருதி, ஹாரிதஸ்மிருதி என்பன.

2. இந்தப் பாஞ்சராத்திரம் புறச்சமயங்களில் ஒன்று.

முறையே தீக்கை செய்துகொண்டு வாசுதேவனை வழிபட்டு, அவன் வடிவில் இலயமாதலே முத்தி என்றும் கூறப்படும்.

இனி இதிகாச புராணங்களில் *வைதிக கன்மங்களும், சாங்கியம் பாதஞ்சலம் பாஞ்சராத்திரம் பாசுபதம் சைவம் என்னும் இவற்றில் கூறும் பொருள்களும், தோற்ற ஒடுக்கங்களும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும் பாரம்பரியக் கதைகளுங் கூறப்படும்.

இதிகாசமாவது மகாபாரதம்.

புராணங்கள் பதினெட்டு வகைப்படும். இவற்றிற்குக் கருத்தன் வேதவியாசன். இருபத்தைந்தாம் தத்துவம் ஆன்மா என்றும், தீக்கையான் முத்தி என்றும் புராணங்களில் கூறப்படும்.

இனி அதிமார்க்கநூல் மூன்றனுள் [1]பாசுபத நூலில்: ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரிய காரண சையோகத்தால் தோன்றும் ஞானத்தால் தனித்தனி வேறுபாடுடையனவாய் இருக்கும் என்றும், இவ்வான்மாக்களுக்கு ஆணவமில்லை என்றும், மாயை கன்மங்கள் என்று இரண்டு பாசங்கள் உண்டு என்றும், பாசங்களால் சுகதுக்கங்களை அனுபவிக்கும் என்றும், [2]வைராக்கியம் உண்டாய்ச் சாத்திரத்தில் கூறியபடியே தீக்கை பெற்ற ஆன்மாவினிடத்துப் பரமேசுரனுடைய ஞானமுதலிய குணங்கள் சங்கிராந்தமாய்ப் பற்றும் என்றும், அப்போது குடும்ப பாரத்தைப் புத்திரரிடத்து வைத்துவிட்டுத் துறவறத்தில் செல்லுவார்போல ஈசுரனும் தன்னுடைய ஞானம் முத்தனிடத்துச் சங்கிரமிக்கச் செய்து, தன்னதிகாரத்து ஒழிவுபெற்றிருப்பன் என்றும் கூறப்படும்.

---

* வடமொழி மூலப்பிரதி சிலவற்றில் " 'वैदिकधर्माणाञ्च' " என்ற பாடம் காணப்படுகிறது.

1. பாசுபதம் சங்கிராந்த சமவாதமென்று கூறப்படும்.

2. வைராக்கியம் – உவர்ப்பு

இனி [1]மகாவிரதநூலில்: பாசுபதர் கூறிய முறையே மாயை கன்மங்களுடன் [2]ஆணவமலமும் உண்டு என்றும், ஆன்மாக்களுக்குப் பெத்தத்தும் முத்தியினும் ஞான சத்தியேயன்றி, கிரியாசத்தி இல்லை என்றும், சாத்திரத்தில் கூறியபடியே தீக்கை பெற்று எலும்பணிதல் முதலிய சரியைகளை அனுட்டிப்போர் முத்தராவர் என்றும், இந்த முத்தருக்குக் கேவலம் ஞானசத்தி மாத்திரமே உண்டு. ஞானம் கிரியை என்னும் இரண்டு சத்தியும் பரமேசுரன் ஒருவனுக்கே என்றும் கூறப்படும்.

இனிக் [3]காபாலிகநூலில்: ஆன்ம இலக்கணமும் பந்த இலக்கணமும் பாசுபதர் மகாவிரதர் கூறியபடி என்றும், சாத்திரத்தில் கூறிய முறையே தீக்கை பெற்றுத் தினந்தினம் பச்சைக்கொடி ஒன்று பிடித்துக்கொண்டு மனிதர்தலையோட்டில் பிச்சையேற்றுண்ண வேண்டுமென்றும், மகாவிரதர் கூறிய முறையே முத்தி என்றும் கூறப்படும். பாசுபதம் மகாவிரதம் காபாலிகம் என்னும் அதிமார்க்கசாத்திரம் மூன்றும், மாயை வித்தை காலம் என்னும் தத்தவங்களில் இருக்கும் உருத்திரர் மூவரால் செய்யப்பட்டன.

இனி மறுமையிற்பலிக்கும் சித்தாந்த சாத்திரத்தை இம்மையிலே தெளிவிப்பனவாய், [4]காருடம் தக்கிணம் வாமம் பூதம் என நான்கு நூல்கள் உள்ளன. அவை தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் எனக் கீழுள்ள நான்கு முகங்களால் பரமசிவன் அனுக்கிரகம் செய்யப்பெற்று அந்தப் பெயர்கொண்ட விஞ்ஞானகலர் நால்வரால் செய்யப்பட்டன.

---

1. மகாவிரதம் உற்பத்தி சமவாதமென்று கூறப்படும்.

2. பாசுபதர் ஆணவமலத்து உண்மை கொள்ளார்; மகாவிரதர் ஆணவமலத்து உண்மை கொள்வர்.

3. காபாலம் ஆவேச சமவாதமென்று கூறப்படும்.

4. 'सिद्धान्तं गारुडं वामं भूततन्त्रं च भैरवं। ऊर्ध्वपूर्व कुवेराख्य याम्यवक्त्राद्यथाक्रमं' என் ஸ்ரீகாமிகாகமத்திற் குறிக்கப் பட்டிருக்கின்றது (தந்திராவதார படலம் 21).

இவற்றுள் காருடதந்திரத்தில்: தற்புருடமே பிரமரூபமாகத் தியானம் செய்து பூசிக்கற்பாற்று எனக் கூறப்படும். இந்த நூலில் எவ்வகைப்பட்ட பிணியும் கண்கூடாகத் தீர்க்கும் மந்திரங்களும் மருந்துகளும் கூறப்படும்.

இனித் தக்கிணதந்திரத்தில்: அகோரமே பிரம ரூபமாகத் தியானம் செய்து பூசிக்கப்பாற்று என்றும், யோகத்தை அனுட்டித்துப் பரமசிவனைக் காணவேண்டும் என்றும் கூறப்படும். பகைவரை வெல்லுதற்கு மந்திரங்களும் இதனுட் கூறப்படும்.

இனி வாமதந்திரத்தில்: வாமதேவமே பிரமரூபமாகத் தியானித்துப் பூசிக்கப்பாற்று என்று கூறப்படும். இதனுள் இரசவாதம் முதலியனவும் கூறப்படும்.

இனிப் பூததந்திரத்தில்: சத்தியோசாதமே பிரம ரூபமாகத் தியானித்துப் பூசிக்கற்பாற்று என்று கூறப்படும். பூதப் பிரேதப் பிசாசுகளை ஓட்டும் மந்திரங்களும் மருந்துகளும் இதனுட் கூறப்படும்.

இனிச் சத்திதத்துவத்தில் வசிக்கும் ஓர் ஆன்மாவால் செய்யப்பட்டது சாத்தநூல். இந்தத் தந்திரத்தில் பாற்கரிய வேதாந்திபோலச் சடசித்துக்கள் எல்லாம் சத்தியின் பரிணமம் என்று கூறப்படும்.

இனிக் *கௌளம் யாமளம் முதலிய தந்திரங்கள் மச்சேந்திரநாதர் முதலிய மானுட சித்தராற் செய்யப்பட்டன.

---

* 'கவுளர் அருவுருவப் பொருள் உயிர் என்பர்' என்பது சிவஞானசித்தியார் 4:11–ஆம் திருவிருத்தத்து உரை. இவர்கள் குளசாஸ்திர வாதிகளென ஸ்ரீகாமிகாகமத்து ஆசாரியாபிஷேக விதி படலத்தில் கூறப்பட்டது (சுலோகம் 20). தந்திராவதார படலத்தில் 26–ஆவது சுலோகத்திலும் இப்பெயர் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் இது வேறென்றும் தெரிய வருகிறது.

இனி *உலோகாயத ஞானிகள் பிருதிவி அப்பு தேயு வாயு என்னும் நான்கு பூதங்களையும் அறிந்தமையால் அவர்களுக்கு அவற்றின் கீழ்ப்பட்ட புவனங்களிற் பிறவி ஒழியும். ஆருகதருக்குக் குணதத்துவத்தின் கீழ்ப்பட்ட தத்துவங்களிற் பிறவி ஒழியும். நையாயிக வைசேடியர்களுக்கும் புத்திதத்துவம் வரையும் பிறவி ஒழியும். புத்தருக்குப் புத்திதத்துவத்தின் கீழ்ப் பிறவி ஒழியும். சாங்கியருக்குப் பிரகிருதியையும் புருடனையும் விவேகித்தறிதலால் பிரகிருதிவரையும் பிறவி ஒழியும். பிரகிருதிக்கு மேற்பட்ட மிச்சிராத்துவாக்களை அறியாமையால் கன்மசேடமுடையவர்கள் ஆதலான் இவர்களுக்கு விஞ்ஞான கேவலத்தன்மை வராது. பாஞ்சராத்திரிகளுக்குப் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட புவனங்களிற் பிறவி ஒழியும். வேதாந்திகள் புருட தத்துவத்தை அடைவர். பௌராணிகர் அராக தத்துவத்தை அடைவர். காபாலிகர் காலதத்துவத்தை அடைவர். பாசுபதர் மாயாதத்துவத்தை அடைவர். மகாவிரதர் வித்தியாதத்துவத்தை அடைவர். காருடம் தக்கிணம் வாமம் பூதம் என்னும் தந்திரங்களில் தீக்கை பெற்றவர் சத்திதத்துவத்திலுள்ள நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி என்னும் புவனங்களை முறையே அடைவர். சுத்தமாகிய சாத்தநூலார் சத்திதத்துவத்தையடைவர். கௌளம் யாமளம் முதலிய சாத்திரங்களில் பெண்புணர்ச்சி கொலை முதலியன உண்மையால் இவர்கள் பிசாசபதத்தை அடைவார்கள்.

இனிச் சித்தாந்த சாத்திரமாவன: விந்துவினின்றும் நாதம் தோன்றி விந்துவும் பிரணவமும் வன்னங்களும் ஆக முறையே பரிணமித்து அனுட்டுப்புச்சந்தசாய்ச் செய்யப்பட்டன. அவை

---

*'அவ்வத் தெய்வங்கள் நிலைபெறும் தத்துவமே அவ்வச் சமயத்தார்க்கு முத்தித்தானமென்பதும் இதனுற் பெறுதும். அவ்வவற்றின் மேலுள்ள தத்துவங்கள் அவ்வச் சமயத்தார்க்கு உணர்ச்சி செல்லாமையின், அவ்வத்தத்துவத்தின் அளவினன்றி அவருக்குமேற்சேறல் கூடாமை அறிக' என்பது சிவஞானசித்தியார் 2:73ஆம் திருவிருத்த உரை.

சிவபேதமும் உருத்திரபேதமும் என இருவகைப்படும். விஞ்ஞானகலரில் பரமசிவன் அனுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய பெயருடைய [1]பத்துச் சிவன்களுக்கும் சத்தியோசாதம் வாமதேவம் என்னும் திருமுகங்களான் அருளிச் செய்த காமிக முதலிய அபரஞானம் பத்தும் சிவபேதம் எனப்படும். இவ்வாறு பரமசிவன்பால் உபதேசம் பெற்ற [2]உருத்திரர் பதினெண்மருக்கும் அகோரம் தற்புருடம் ஈசானம் என்னும் திருமுகங்களான் அருளிச்செய்த விசயம் முதலிய பதினெட்டும் உருத்திரபேதம் எனப்படும். இந்த இருபத்தெட்டுச் சிவாகமங்களும் ஒவ்வொன்றிற்குக் கோடி கிரந்தமாக இருபத்தெட்டுக்கோடி கிரந்தங்களாம். இச்சைவாகமம் இருபத்தெட்டிற்கும் சித்தாந்தம் என்று பெயர்.

இவை ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்கள் உடையனவாய் இருக்கும்.

இவற்றுள் ஞானபாதத்தில்: பரமசிவனுடைய சொரூபமும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம் கான்மியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என்னும் பாசங்களின் சொரூபமும், சத்தியின் சொரூபமும், சிவதத்துவமுதல் பிரகிருதி தத்துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களினது உற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியாம் முறைமையும், புவனங்கள் புவனேசுரர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப்பிரமாணங்களும்,அதமப் பிரளயம், மத்திமப் பிரளயம்

---

1. பத்துச் சிவன்கள் ஆவார்: பிரணவர், சுதர், சுதீப்தர், காரணர், கபிலர், ஈசர், சூக்ஷ்மர், காலர், அம்பு, தபேசர் என்பவர்.

2. உருத்திரர் பதினெண்மராவார்: அநாதி ருத்திரர், தசார்ணர், நிரதகேசர், விபோமர், தேஜசு, பிராம்ஹணேசர், சிவர், சார்வாத்மகர், அநந்தர், பிரசாந்தர், சூலி, ஆலயேசர், பிந்து, சிவநிஷ்டர், சோமர், ஸ்ரீதேவி, தேவவிபவர், சிவர் என்பவர். இவ்வாறு ஸ்ரீகாமிகாகமத்துத் தந்திராவதார படலத்தில் கூறப்பட்டது.

மகாபிரளயங்களின் சொரூபங்களும், அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியாம் முறைமையும், பாசுபதம் மாவிரதம் காபாலிகம் முதலிய மதங்களின் சொரூபங்களும் கூறப்படும்.

இனிக் கிரியாபாதத்தில்: மந்திரங்களினது உச்சாரணம் சந்தியாவந்தனம் பூசை செபம் ஓமங்களும், [1]சமயம், [2]விசேடம் [3]நிருவாணம் ஆசாரியாபிடேகங்களும், [4]புத்தி முத்திகளுக்கு உபாயமான தீக்கையும் கூறப்படும்.

இனி யோகபாதத்தில்: இந்த முப்பத்தாறு தத்துவங்களும், தத்துவேசுரரும் ஆன்மாவும் பரமசிவனும் சத்தியும் சகத்திற்குக் காரணமான மாயை மாமாயைகளைக் காணும் வல்லமையும், அணிமாதி சித்திகள் உண்டாம் முறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணம் தியானம் சமாதிகளினுடைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

இனிச் சரியாபாதத்தில்: பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும், சிவலிங்க இலக்கணமும், உமாமகேசுரர் முதலிய வியத்தாவ்வியத்த இலிங்கங்களின் இலக்கணமும், நந்தி முதலிய கணநாதர் இலக்கணமும், செபமாலை யோகபட்டம் தண்டம் கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும், அந்தியேட்டி விதியும் சிராத்த விதியும் கூறப்படும்.

---

1. சமய தீக்ஷை சைவா சாரத்திற்கு அதிகாரம் அளிப்பது.

2. விசேட தீக்ஷை சிவபூசை முதலியவற்றிற்கும், யோக நெறிக்கும், சிவாகமம் ஓதுதற்கும் அதிகாரமளிப்பது.

3. நிருவாண தீக்ஷை சிவாகமங்களின் உண்மைப் பொருள் ஆராய்வதற்கு அதிகாரமளிப்பது.

4. புத்தி – போகம்.

7. *தீக்ஷாப்பிரகரணம்

சமயதீக்கை பெற்றோர் உருத்திரபதம் அடைவர். விசேடதீக்கை பெற்றோர் மகேசுரபதம் அடைவர். ஈண்டு உருத்திர பதமென்றது குணதத்துவ மத்தகத்திலிருக்கும் உருத்திரபதமே ஆம். ஈசுரபதம் என்றது பிரகிருதிக்குமேல் மிச்சிராத்துவாவில் முந்தின தத்துவமான அராகதத்துவபதமே ஆம். ஈசுரனுலதிட்டிக்கப் படுவதாகலான் அந்தத் தத்துவத்தை அடைவதே ஈசுரபதத்தை அடைவது என்று சொல்லப்படும். சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் பாஞ்சராத்திரங்களில் கூறும் வழிக்கு மேற்பட்ட நிருவாண தீக்கையைப் பெற்றவர் பரமசிவனோடு சாமியமான முத்தியை அடைவர்.

இனி நிர்வாண தீக்கை: சத்திய நிருவாணம், அசத்திய நிருவாணமென இருவகைப்படும். அவற்றுள் சத்திய நிருவாணதீக்கை பெற்றோர் தீக்கை பெற்ற போழ்தே சரீரம் நீங்கி முத்தியைப் பெறுவர். அசத்திய நிருவாண தீக்கை பெற்றோர் தீக்கையில் சஞ்சிதமும் ஆகாமியமும் சோதித்துச் சரீரம் நிற்பதற்கு ஏதுவாய்ப் புசிக்கப்படும் பிராரத்தகன்மம் சோதிக்கப் பட்டாமையால் ஆயுள் முடிவில் சரீரம் நீங்கி முத்தியடைவர்.

சாதகதீக்கை பெற்றுச் சிவபத்தி சிவபூஜை செய்துகொண்டு பின்பு வித்தியேசுரர் முதலியோர் பதங்களை விரும்பினவர் அந்தப் பதங்களைப் பெறுவர். அப்பதங்களில் இருப்பவர்க்குள் பற்றற்றவர் அப்பொழுதே முத்தியை அடைவர்; அல்லாதார் மகாசங்காரகாலத்து முத்தியைப் பெறுவர்.

நிர்ப்பீசதீக்கையாவது: தீக்கை செய்ததன்பின் அனுட்டிக்கப்படும் சந்தியாவந்தனம் சிவலிங்கார்ச்சனை முதலிய சமயாசாரங்களைத் தீக்கை செய்யும்பொழுதே சோதித்து ஒழிப்பது

---

*தீக்ஷை.

ஆகலான் *பாலர் வாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிப்பட்டவர்க்குப் பண்ணுவதாம்.

சபீசதீக்கையாவது: ✪வல்லமையுடைய சமயிபுத்திரர் சாதகாசாரியர்க்குப் பண்ணுவதாம். இந்தத் தீக்கையில் சஞ்சிதம் ஆகாமியம் என்னும் இருவகைக் கன்மங்களும் இந்தக் கன்மங்களுக்கு ஈடான எல்லாச் சரீரங்களும் சுத்தி செய்யப்படும். சரீரம் இல்லாமையால் போகங்களும் நசிக்கும். இந்தச் சரீரங்களுக்கு ஏதுவான ' பிராரத்தகன்மம் சுத்தி செய்யப் படாமையால் சரீரத்துக்குள்ள சுக துக்கங்கள் அனுபவிக்கப்படும். இவ்வாறு மூவகைக் கன்மங்களும் நாசமாம். ஆகவே தீக்கையானபின் மரணமளவும் சாத்திரங்களின் விதித்த நியமங்களில் வழுவாமை ஆசரிக்கவேண்டும். பரமசிவனது திருவருளாகிய தீக்கையானன்றி மற்றொன்றினும் முத்தி இல்லை.

தீக்கை செய்துகொண்டபின்பு ஆசாரத்தில் வழுவினால் புத்திபூர்வமாகச் செய்த பாவம் பிராயச்சித்தத்தினாலும் மந்திராதி திரவியங்களின் உபாயங்களாலும் பவித்திர விதியினாலும் சுத்தியாம். அபுத்திபூர்வமாக வழுவினால் அந்தியேட்டிக் கிரியையால் சுத்தியாம்.

தீக்கை செய்துகொண்டபின்பு ஆவசியகமாக அனுட்டிக்கப்படும் கன்மங்களாவன: இயம நியமங்களும், சந்தியாவந்தனம் சிவலிங்கபூசை அக்கினி காரியங்களும் குருவசன பரிபாலனமும், இயன்ற மட்டும் மாகேசுரபூசை முதலியனவுமாம்.

---

*'பாலரொடு வாலீசர் விருத்தர் பணிமொழியார் பலபோகத்தவர் வியாதிக்கப்பட்டவர்க்குப் பண்ணும் சீலமது நிர்ப்பீசம்' என்பது சிவஞானசித்தியார் 8:4–ஆம் பாடல்.

" ' बालबालीशवृद्धस्त्रीभोगभग्न्याधितान-
त्मनां । यथाशक्तिददीतैतान् समर्थस्यसमग्रकान् ' "

என்பது சோமசம்பு பத்ததி, விசேஷ தீக்ஷாவிதி. 24.

✪ஒதியுணர்ந் தொழுக்கநெறி யிழுக்கா நல்ல வுத்தமர்க்குச் செய்வதுயர் பீசம்' என்பது சித்தியார் 8:5

அனுட்டிக்கலாகாத கன்மங்களாவன: நிர்மாலியம் புசித்தல், சிவநிந்தை, சிவசாத்திர [1]விதிதாசாரநிந்தை, தேவ திரவியங்களை உபயோகஞ்செய்தல், உயிர்க்கொலை முதலாயினவாம்.

இவ்வாறு தீக்கைபெற்று விதித்தபடி அனுட்டித்து முத்தனுகிய ஆன்மாவுக்கு ஆணவம் கான்மியம் மாயேயம் வைந்தவம் திரோதானசத்தி என்னும் பாசங்களினின்று நீங்குதலும், பரமசிவன்போல முழுதும் உணர்தல், முழுதுஞ் செய்தல், சித்தமகிழ்ச்சி, அநாதியாகிய சுதந்திரத்தன்மை, கெடாதசத்தியுடைமை, அளவிறந்த சத்தியுடைமை என்னும் சாட்குண்ணியத்தின் சொரூபத்தைப் பெறுதலும் இலக்கணமாம். இந்தக் குணங்களைப் பெற்றவர்க்குப் [2]பரமசிவனைப்போலப் பஞ்சகிருத்தியம் செய்தல் கூடாது. பரமசிவனே பஞ்ச கிருத்தியத்தால் பிறருக்கு அனுக்கிரகம் செய்வர் என அறிக.

சர்வாத்மசம்பு சிவாசாரியராற் செய்யப்பட்ட வடமொழிச் சித்தாந்தப் பிரகாசிகை, திருவாவடுதுறைச் சிவஞானமாதவனுற் சித்தாந்தப் பிரகாசிகை எனத் தென்மொழியாற் செய்யப்பட்டது.

சித்தாந்தப் பிரகாசிகை முற்றிற்று.

---

1. விதிதம் – விதிக்கப்பட்டது.

2. 'உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக்குரியன் உயிர்தானும் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே' என்பது சிவஞானசித்தியார் 11:10.